**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 144/2023**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW1<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Damodaran |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 1st day of April, 2025.

**(All Accused are present.)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை** :

நான் தற்போது ஆர்.கே. பேட்டை வட்டம், செதிலூர் காலனியில் வசித்து வருகிறேன். நான் ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள்

ஊருக்கு பக்கத்து ஊரைச் சேர்ந்தவர்கள். எங்கள் கிராமத்தில் 100 குடும்பத்திற்கு மேல் வசித்து வருகிறோம். எங்களுக்கு போதுமான இடவசதியில்லாத காரணத்தினால் அரசாங்கத்திடம் இலவச வீட்டுமனை கேட்டோம். 1994ல் சர்வே எண். 107/1, 109/8ல் 61 பேருக்கு அரசாங்கம் வீட்டுமனை பட்டா வழங்கியது. 2002ல் அதே சர்வே எண்ணில் 39 பேருக்கு பட்டா வழங்கினார்கள். பட்டா கொடுத்துவிட்டு இடத்தை எங்களுக்கு காட்டவில்லை. அதற்காக நாங்கள் வருவாய்துறை அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டிருந்தோம். இடத்தை சர்வே செய்யவில்லை. 2019ஆம் ஆண்டு மனித உரிமை ஆணையத்தில் எங்கள் இடத்தை சர்வே செய்து எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மனு கொடுத்தோம். திருத்தணி Welfare தாசில்தார் மற்றும் சர்வேயர் வேல்முருகனை மனத உரிமை ஆணையத்தில் அழைத்து எச்சரித்தார்கள். கைப்பட எழுதி கொடுக்க சொன்னார்கள். அவர்கள் எழுதி கொடுத்த நகலை என்னிடம் கொடுத்தார்கள். மறுபடியும் மனித உரிமை ஆணையத்தின் புகாரின் மீது அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறினோம். 10/05/2021ல் 25 வருடம் காலமாதமாக இடத்தை அளந்து கொடுக்காமல் இருந்ததற்கு 10/05/2021ல் இருந்து 3 மாதத்திற்குள் இடத்தை அளந்து கொடுக்கவேண்டும் என்று பட்டா இடத்தை 1 மாதத்திற்குள் கொடுக்க வேண்டும் என உத்தவிட்டார். மறுபடியும் மாவட்ட ஆட்சியரையும், கோட்டாட்சியரையும் கேட்டுக் கொண்டிருந்தோம். அவர்கள் ஒரு வருடம் காலதாமதமாக 02/06/2022ல் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்பேரில் 100 மனையை கோட்டாட்சியர் முன்னிலையில் சர்வே செய்து கல்நட்டு கொடுத்தார்கள். 23/06/2022ல் இரவு 9.30 மணியளவில் நானும், முத்து, சந்திரன், ஆறுமுகம் ஆகியோர் வீடுகட்டுவதற்காக அங்கு சென்று பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது அங்கு சத்தமாக இருந்தது. ராஜாநகரம் கிழக்கிலிருந்து வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர்கள் எங்களுக்கு நட்டுவைத்திருந்த கற்களை சம்மட்டி, கடப்பாறையால் பிடிங்கி எடுத்தார்கள். அவர்கள் கண்ணன், புருஷோத்தமன், சேட்டு (எ) குமார், பாண்டியன் மற்றும் சிலர்.

இன்றைய தினம் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளனர். என்னையும் திட்டி துரத்திவிட்டார்கள். எங்கள் ஜாதி பெயரை சொல்லி என்னை திட்டினார்கள். இங்கு வந்து வீடுகட்டினால் ஜாதி கலவரம் செய்வோம் என்று கூறினார்கள். பின்னர் கரண்ட் ஆப் செய்துவிட்டார்கள். போலீசார் எனக்கு சப்போர்ட்ஆ என மிரட்டினார்கள். உங்களை வாழவிடமாட்டோம் என்று மிரட்டினார்கள். பரபசங்க உங்களுக்கு என்ன வேலை என்று ஜாதி பெயரை சொல்லி திட்டினார்கள். ஜன கூட்டம் அதிகமாக இருந்ததால் நாங்கள் அங்கு நிற்கமுடியவில்லை. வந்துவிட்டோம். மறுநாள் 24/06/2022ல் காலை 7.00 மணிக்கு ஆர்.கே. பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் நீதிபதியிடம் இரகசிய வாக்குமூலம் கொடுத்தேன். 164 கு.வி.மு.ச. வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

நான் செதிலூர் கிராமத்தில் பூர்வீகமாக குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். செதிலூர் காலனியில் 40 குடும்பங்கள் குடியிருந்து வருகிறது என்றால் தற்போது 250 குடும்பங்கள் குடியிருந்து வருகிறார்கள். ஆஜர் எதிரிகளும் பூர்வீகமாக ராஜாநகரம் கிழக்கில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எங்கள் கிராமத்தை சேர்ந்தவர்கள், படிக்கும் மாணவர்கள், வேலைக்கு செல்பவர்கள் ராஜாநகரம் கிழக்கு அண்ணா சாலையின் வழியாக தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். 2022ஆம் வருடம் சம்பவத்திற்கு முன்பதாக எங்கள் இரு கிராமத்தினருக்கிடையே பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். புகாரை நான் எழுதவில்லை என்றால் டைப் செய்து கொடுத்தேன். புகார் எங்கு டைப் செய்யப்பட்டது என்றால் தற்போது சரியாக ஞாபகமில்லை. வேறு யாரோ தயார் செய்து அதில் கையொப்பம் செய்ததால் தான் நீதிமன்றத்தில் ஞாபகமில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுக்க

யாரெல்லாம் சென்றோம் என்றால் ஆறுமுகம், முத்து, சந்திரன் ஆகியோர் சென்றோம். புகாரை இரவே டைப் செய்து காலையில் காவல் நிலையத்தில் கொடுத்தோம் என்றால் நாங்கள் சொல்லி வைத்திருந்தோம் அவர்கள் தயார் செய்து வைத்திருந்தார்கள் அதை காவல் நிலையத்தில் கொண்டு கொடுத்தோம். பட்டா, நிலம் சம்பந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் வழக்கு தாக்கல் செய்தோமோ என்றால் இல்லை. புகாரில் 20 மற்றும் பலர் என்று கூறியுள்ளேன். யார் பெயரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் இரவு 9.30 மணிக்கு எத்தனை மின்விளக்குகள் இருந்தது என்று என்னால் கூறமுடியுமா என்றால் அங்கு மின்கம்பங்கள் இல்லை போலீசார் லைட் ஏற்பாடு செய்திருந்தார்கள், 10 அல்லது 12 லைட் இருந்திருக்கும். அங்கு லைட் எதுவும் இல்லை என்றாலும் இருட்டான இடம் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது எத்தனை போலீசார் இருந்தார்கள் என்றால் 10 முதல் 15 காவலர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் ஆர்.கே. பேட்டை காவல் நிலையத்தை சேர்ந்தவர்கள் என்றால் எனக்கு தெரியாது. 9.30 மணிக்கு ஆரம்பித்த பிரச்சனை எவ்வளவு நேரம் நடந்தது என்றால் 10 நிமிடத்தில் நாங்கள் வந்துவிட்டோம். அதன்பின்பும் காவலர்கள் அங்கு தான் இருந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. சம்பவத்தை நானோ, போலீசாரோ, உடனிருந்த வேறு நபர்களோ போனில் வீடியோ அல்லது போட்டோ எடுத்தார்களா என்றால் இல்லை. சம்மபட்டி, கடப்பாறை ஆகியவற்றை போலீசார் என்னிடம் காட்டி வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. புகாரில் எதிரிகள் எனக்கு அடையாளம் தெரிந்த நபர்கள் என்று கூறியுள்ளேன் போலீசார் எதிரிகளை அடையாளம் காட்ட அழைத்தார்களா என்றால் இல்லை. எதிரிகள் அனைவரும் பக்கத்து கிராமத்தை சேர்ந்தவர்கள் என்பதால் சம்பவதிற்கு முன்பதாகவே அவர்களை எனக்கு தெரியும் என்றால் சரிதான். நீதிபதி முன்னிலையில் வாக்குமூலம் கொடுக்க போலீசார் அழைத்து சென்றார்கள் என்றால் போலீசார் தான் வரசொல்லி சொன்னார்கள். நீதிமன்றம் வரை ஒரு போலீசார்

உடன்வந்தார்கள். நான் நீதிமன்றத்தில் நீதிபதியிடம் கொடுத்த வாக்குமூலம் போலீசார் சொல்லி அதன்படி நான் கூறிய வாக்குமூலம் என்றால் சரியல்ல. புகாரிலும், போலீசார் விசாரணையிலும் பஞ்சாயத்து தேர்தலையும், சட்டமன்ற தேர்தலையும் புறக்கணிப்போம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அப்போது ராஜாநகரம் கிழக்கை சேர்ந்தவர்கள் தேர்தலின் போது பிரச்சாரம் மற்றும் வாக்களித்தார்கள் என்றால் சரிதான். அப்போது எங்களுடன் நீங்களும் சேர்ந்து தேர்தலை புறக்கணியுங்கள் என்று கேட்டதற்கு ஒத்துழைக்காததால் முன்விரோதம் இருந்து வந்தது என்று சொன்னால் சரியல்ல. மேற்கூறிய முன்விரோதம் காரணமாக நான் எதிரிகள் மீது பொய்யாக ஒரு புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவத்தில் நாங்கள் 4 பேரும், எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள், ராஜாநகரம் கிழக்கு கிராம மக்கள் மற்றும் எதிரிகளை தவிர வேறு பொதுமக்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். அதேபோல் அந்த இடத்திலிருந்து வருவாய்துறையினர் போட்ட கல்லை உடைத்துவிட்டார்கள் என்று கூறியுள்ளேன் ஆனால் யார் யார் சம்மட்டியாலும், கடபாறையாலும் உடைத்தார்கள் என்று புகாரிலோ, வாக்குமூலத்திலோ, நீதிமன்றத்தில் அளித்த 164 கு.வி.மு.ச. வாக்குமூலத்திலோ, முதல்விசாரணையிலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய சாதி பெயரை குறிப்பிட்டு இன்னார் தான் சொன்னார் என்று புகாரிலோ, வாக்குமூலத்திலோ, நீதிமன்றத்தில் அளித்த 164 கு.வி.மு.ச. வாக்குமூலத்திலோ, முதல் விசாரணையிலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆகவே எதிரிகள் 41 பேரும் சாதி பெயரை சொல்லி திட்டினார்கள் என்று அதிகபடியான சந்தேகத்திற்கு உட்பட்டது என்றால் சரியல்ல. புகார் கொடுத்த அன்றே போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்னதை பதிவு செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது. அதன்பிறகு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. பிறகு எந்த தேதிக்கு நீதிமன்றத்திற்கு வரவேண்டும் என்று மட்டும் தான் சொன்னார்கள். எதிரிகள் மீது முன்விரோதம் காரணமாக பொய்யாக வழக்கு தொடுத்து பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.